மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சென்னையிலே ஆகின்ற செலவு அதிகமாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அவ்வளவு செலவாவது இல்லை. சென்னை மாநகரத்தில் அதிகமான விலை கொடுத்து பண்டங்களை, காய்கறிகளை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த நிலையை வைத்துக் கொஞ்சம் கூட்டித் தரப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாணவர்களுக்கு வழங்கப் படுகின்ற உதவித் தொகை மார்ச் மாதம் இறுதியான பிறகு கூட கொடுக்கப்படுவது இல்லை. திருச்சி பெரியார் கல்லூரி, காந்தி கிராமக் கல்லூரி மாணவர்கள் இந்த ஆண்டு கூட இதைப்பற்றி அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். டிசம்பர் மாத இறுதிக்குள் இந்தத் தொகையை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதைப் பற்றி மாண்புமிகு பாலசுந்தரம் அவர்கள் கேட்டபோதே விவரமாக எடுத்துச் சொன்னேன். நலத் துறையில் தாமதம் இல்லை. கல்வித் துறையில் தாமதம். கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகக் கூறி இருக்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா: தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருமான வரம்பை ஐயாயிரம் ரூபாயாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இவ்வளவு ஆண்டு காலமாக வருமான வரம்பு 1,500 ரூபாயாக இருந்தது. அது 2,000 ஆக்கப்பட்டு தற்போது 2,500 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. படிப்படியாக உயர்த்தப்படும். இதுவே பெரிய உயர்வு என்றுதான் கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி: இந்த உதவித் தொகை தாழ்த்தப்பட்ட கிறித்தவ சமுதாயத்தினருக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாநில அரசு முழுக்க முழுக்க தொகை கொடுப்பதாக இருந்தால் அது கிறித்தவர்களுக்கும் பொருந்தும். இந்த உதவித் தொகைக்கு மத்திய அரசும் நிதி உதவி செய்கிற காரணத்தால் இது கிறித்தவர்களுக்குப் பொருந்தாது.

அரிசி கைப்பற்று

*800 வினா.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1972-ஆம் ஆண்டு, சனவரி முதல் வாரத்தில், வட ஆர்க்காடு மாவட்டம் செய்யாருக்கு அருகில் உள்ள சோழவரத்திலிருந்து சென்னைக்கு பஸ் மூலம் எடுத்துச் சென்ற 18 மூட்டை அரிசியை, சிவில் சப்ளை அதிகாரிகள் போலீஸ் உதவியுடன் கைப்பற்றியது உண்மையா ?